சுருக்கம்

வேலூர் மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

**அரசாணை (நிலை) எண்.52 நாள்:17.03.2010.**

**படிக்கப்பட்டன:**

3. அரசாணை (பத்தாண்டு) எண்.374, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.8.2008.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம். ந..க.எண்.51452/2004/எம்.3, நாள் 13.1.2010.

–––

**ஆணை:–**

வேலூர் நகராட்சி, அதன் அப்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி, அப்படியே, அதாவது, 48 வார்டுகளுடன் வேலூர் மாநகராட்சியாக அமைக்கப்பட்டு, 1.8.2008 முதல் வேலூர் மாநகராட்சி செயல்படத் துவங்கியுள்ளது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளுடன் முறையே இணைக்கப்பட கருதப்பட்டுள்ள பகுதிகளை உள்ளடக்கிய அவ்விரு மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து பணிகள் குறித்தான அறிக்கைகளை, தொடர்புடைய சட்டப்பிரிவுகள், விதிகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி அரசுக்கு அளிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

3. இப்பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு.துரை.சந்திரசேகரன், சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதாகவும், சிறப்பு அதிகாரியின் அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைப்பதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. சிறப்பு அதிகாரி தமது அறிக்கையில், வேலூர் நகரத்தின் தென்பகுதியில் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி, நகரத்தின் மேற்குப் பகுதியில் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அப்துல்லாபுரம் விமான நிலையம், நகரத்தின் வடக்குப் பகுதியில் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் காட்பாடி ரயில் நிலையம், நகரின் கிழக்குப் பகுதியில் 25 கி.மீ. தொலைவில் உள்ள ராணிப்பேட்டை தொழில் நகரம் போன்றவை உத்தேச வேலூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்டால், வேலூர் மாநகராட்சி விரைவில் எல்லா விதத்திலும் வளர்ச்சியடையும் என்பதால் வேலூர் மாநகராட்சியுடன் ஆற்காடு, வாலாஜாப்பேட்டை, இராணிப்பேட்டை ஆகிய 3 நகராட்சிகள், சத்துவாச்சாரி, தாராபடவேடு, மேல்விஷாரம் ஆகிய 3 மூன்றாம் நிலை நகராட்சிகள், சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாபுரம், பென்னாத்தூர், கழிஞ்சூர், காந்திநகர், காட்பாடி, திருவலம் ஆகிய 8 பேரூராட்சிகள் மற்றும் பலவன்சாத்து, இடையன்சாத்து, அடுக்கம்பாறை, துத்திப்பட்டு, விருப்பாட்சிபுரம், அரியூர், சித்தேரி, குப்பம், சிறுகாஞ்சி, சதுப்பேரி, செம்பேடு, அப்துல்லாபுரம், கொணவட்டம்,

அன்பூண்டி, மேல்மொனவூர், கீழ்மொனவூர், கருகம்பத்துார், விருதம்பட்டு, தண்டல கிருஷ்ணாபுரம், சேனூர், ஜாப்ராபேட்டை, வஞ்சூர், கரசமங்கலம், வண்டரந்தாங்கல், காங்கேயநல்லூர், மெட்டுக்குளம், அலமேலு ரங்காபுரம், வெங்கடாபுரம், பெருமுகை, அரப்பாக்கம், ஏரந்தாங்கல், சேர்க்காடு, புத்துார், அரும்பருத்தி, கார்ணாம்பட்டு, கண்டிபேடு, சேவூர், கரிகிரி, பிரம்மபுரம், லாலாபேட்டை, சீக்கராஜபுரம், நரசிங்கபுரம், குகையநல்லூர், குப்பத்தாமோட்டூர், செம்பராய நல்லூர், ஆரிமுத்துமோட்டூர், அம்முண்டி, வன்னிவேடு, அம்மணந்தாங்கல், வி.சி.மோட்டூர், மாந்தாங்கல், செட்டி தாங்கல், வானாப்பாடி, முகுந்தராயபுரம், வேப்பூர், நவ்லாக், மணியம்பட்டு, தெங்கால், நந்தியாலம், கீழ்மின்னல், பூட்டுத்தாக்கு ஆகிய 61 ஊராட்சிகளும் இணைக்கப்படலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

5. வேலூர் நகர்மன்றம், 22.07.2008 அன்று, 3 நகராட்சிகள், 3 மூன்றாம் நிலை நகராட்சிகள், 8 பேரூராட்சிகள், 61 ஊராட்சிகளை இணைத்து வேலூர் மாநகராட்சியாக உருவாக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது (தீர்மான எண்.332). மேலும், மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் வேலூர் மாநகராட்சியுடன் இணைந்திட ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

6. வேலூர் மாநகராட்சிக்கான சிறப்பு அதிகாரியின் அறிக்கை குறித்து தொடர்புடைய அதிகாரிகளுடன் விரிவான விவாதம் மற்றும் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், அரசு, வேலூர் மாநகராட்சியுடன் ஆற்காடு, வாலாஜாப்பேட்டை, இராணிப்பேட்டை ஆகிய 3 நகராட்சிகள், சத்துவாச்சாரி, தாராபடவேடு, மேல்விஷாரம் ஆகிய 3 மூன்றாம் நிலை நகராட்சிகள், சேண்பாக்கம்,தொரப்பாடி, அல்லாபுரம், பென்னாத்தூர், கழிஞ்சூர், காந்திநகர், காட்பாடி, திருவலம் ஆகிய 8 பேரூராட்சிகள் மற்றும் பலவன்சாத்து, இடையன்சாத்து, அடுக்கம்பாறை, துத்திப்பட்டு, விருப்பாட்சிபுரம், அரியூர், சித்தேரி, குப்பம், சிறுகாஞ்சி, சதுப்பேரி, செம்பேடு, அப்துல்லாபுரம், கொணவட்டம், அன்பூண்டி, மேல்மொனவூர், கீழ்மொனவூர், கருகம்பத்துார், விருதம்பட்டு, தண்டல கிருஷ்ணாபுரம், சேனூர், ஜாப்ராபேட்டை, வஞ்சூர், கரசமங்கலம், வண்டரந்தாங்கல், காங்கேயநல்லூர், மெட்டுக்குளம், அலமேலு ரங்காபுரம், வெங்கடாபுரம், பெருமுகை, அரப்பாக்கம், ஏரந்தாங்கல், சேர்க்காடு, புத்துார், அரும்பருத்தி, கார்ணாம்பட்டு, கண்டிபேடு, சேவூர், கரிகிரி, பிரம்மபுரம், லாலாபேட்டை, சீக்கராஜபுரம், நரசிங்கபுரம், குகையநல்லூர், குப்பத்தாமோட்டூர், செம்பராய நல்லூர், ஆரிமுத்துமோட்டூர், அம்முண்டி, வன்னிவேடு, அம்மணந்தாங்கல், வி.சி.மோட்டூர், மாந்தாங்கல், செட்டி தாங்கல், வானாப்பாடி, முகுந்தராயபுரம், வேப்பூர், நவ்லாக், மணியம்பட்டு, தெங்கால், நந்தியாலம், கீழ்மின்னல், பூட்டுத்தாக்கு ஆகிய 61 ஊராட்சிகளும் இணைக்கப்படலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

7. விரிவாக்கப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் போதிய கால அவகாசம் மற்றும் வேலூர் மாநகராட்சி, அதனுடன் இணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் பாதிக்கப்படக் கூடாது என்பவற்றை கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தற்போதைய உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் 2011–ஆம் ஆண்டு முடிவடைந்தவுடன் விரிவுப்படுத்தப்பட்ட வேலூர் மாநகராட்சி அமைக்கப்படலாம் எனவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

.3..

8. இவ்வாணைகளின் அடிப்படையில், தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை 600 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர்,
பனகல் கட்டடம், சைதாப்பேட்டை, சென்னை 600 015.
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்.
ஆணையர், வேலூர் மாநகராட்சி.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள், மூன்றாம் நிலை நகராட்சி செயல் அலுவலர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வழியாக)

நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6, ந.நி.5, பேரூ.2,அ.ந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.